


# காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 ஆனி 2 (16-6-74) | இதழ்: 48


★

உள்ளே......


படமும் பாடமும் (3)
(அறிஞர் அண்ணா)

★

வெற்றி நிச்சயம்!
(நலியங்கம்)

★

பாரதிதாசன் கவிதைகளில்
சமுதாயச் சீர்திருத்தம்
(கட்டுரை)

★

முல்லைக்கொடி
(சிறுகதை)


★

## புதுமை வளர்ப்பாய்!

(புலவர் தி. நா. அறிவுஒளி)

பொங்கும் பணத்திலே
முங்கிக் குளித்திடும்
புல்லரைக் கொன்றொழிப்பாய்—அவர்
புன்மையை இன்றழிப்பாய்!

எங்கும் பொதுமையை
இன்பக் கடமையை
ஏற்றி யரசமைப்பாய்!—நலம்
போற்றி அறம் அமைப்பாய்!

கொள்கையைக் கொன்றிடும்
கூற்றக் கயவரைக்
கூண்டில் அடைத்திடுவாய்!—அவர்
பூண்டைத் துடைத்திடுவாய்!

கள்ளம் வளர்த்திடும்
காட்டுத் தனங்களைக்
காய்ந்து திருத்திடுவாய்—வளம்
ஆய்ந்து பொருத்திடுவாய்!

வெற்றி அறிவியல்
விளைக்கும் புதுமையை
வேண்டி வளர்த்திடுவாய்—நலம்
யாண்டும் விளைத்திடுவாய்!

புற்று மனங்களை
முற்றும் ஒழித்திடு
பூக்கும் புதுமாட்சி—சுவை
தேக்கும் நலஆட்சி!

விலை: 0-25 காசு



# பாரதிதாசன் கவிதைகளில் சமுதாயச் சீர்திருத்தம்

மு. பி. பாலசுப்பிரமணியன்

## 1. கவிதை

கவிஞனின் இதயத்திலிருந்து பிறப்பது கவிதை. 'உயிரிலாச் செய்திகட்கு உயிர் மிகக்கொடுத்து, ஒளியிலாச் செய்திகட்கு ஒளியருள் புரிவது' கவிதை. வாழ்க்கைக்கும் கவிதைக்கும் ஏராளமான தொடர்பு உண்டு. வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்வதோடு, எப்படி வாழ வேண்டும் என்று எடுத்துக் கூறுவதும் கவிதை ஆகும். ஏனென்றால், 'கவிதை என்பது தனி உரிமைபடைத்த கலையாகும். மொழி அதனுடைய ஆற்றல் மிக்க கருவியாக அமைந்துள்ள காரணத்தால் அது நம்வாழ்க்கையில் வேறு எந்தக் கலையையும்விட, ஆழமாக ஊடுருவிப் பாய்ந்திருப்பதோடு மிக நெருக்கமாகப் பின்னிப் பிணைந்தும் இருக்கிறது.' அத்தகைய ஆற்றல் வாய்ந்த கருவியால்தான் சமுதாயத்தைச் சீர்திருத்தமுடியும். 'ஒரு சமுதாயத்தின் விருப்பு வெறுப்பு நம்பிக்கை முதலியவற்றை வளர்த்துப் பண்படுத்துவது அந்தச் சமுதாயத்தின் இலக்கியமே. ஆகையால் அதுவே மனித வாழ்வைப் பெரிதும் மாற்றியமைப்பது! என்பர். எனவே, 'கவிதைகள் வெறும் போதைப் பொருளாக மாறாமல் சமூகத்திற்குத் தெம்பும், திறமும் தேடித் தரும் வழியில் உருப்பெற வேண்டும். அப்போதுதான் சமுதாயம் நோயற்று வாழ முடியும்.'

## 2. சீர்திருத்தம்

சீர்திருத்தம் என்பது காலத்தின் பணியாகும், 'எது எது நியதியினின்றும் வழுக்கி வீழ்கிறதோ, அதை அதைச் செப்பம் செய்ய இயற்கை விழையும் ஒன்று சீர்திருத்தம் என்பது. இச்சீர் திருத்தம் இல்லையேல் உலகம் வளர்ச்சியுறாது.'? மக்கள் சமுதாயத்தில் பல சீர்கேடுகள் உள்ளன. அவற்றைச் சிந்தனையால்—சொற்பொழிவால்—செயலால் சீர்திருத்த முயன்ற செம்மல்கள் பலர். தம் கவிதையாற்றலால் சீர்திருத்த முயன்ற கவியரசர் பலர். 'கலை, கலைக்காகவே என்ற கோட்பாடு பொருளற்றது.' கலை, வாழ்க்கைக்காக— கவிதை, வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக என்ற கொள்கையே வலுவுடையது. ஆதலால் சீர்திருத்தக் கருத்துக்கள் கவிதை வடிவம் பெறத் தொடங்கின.

## 3. பாரதிதாசன்

சாதிக்கொடுமை, சமயக் காழ்ப்பு, மூடநம்பிக்கை, கைம்மைத்துயர். குழந்தை மணம், பெண்ணடிமை, தீண்டாமை முதலிய பல இன்னல்களுக்கு இடங்கொடுத்து இழி நிலைக்குச் சென்று கொண்டிருக்கும் இன்றையச் சமுதாயத்தைக் கண்டு நெஞ்சங் கலங்கியவர் பாரதிதாசன். கவிதைகளைக் கவண் கற்களாகப் பயன்படுத்திச் சீர்கெட்ட சமுதாயத்தைச் சீர்திருத்த எண்ணிய கவியரசர். 'அடிநாள் முதலே சாதி பேதத்தையும், சமயபேதத்தையும் வெறுத்தவர். உயர்ந்த எண்ணமும் விரிந்த அறிவும் கொள்கைக்குப் போராடும் குணமும் கொண்டவர்.'

## 4. சாதிக்கொடுமை

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்கிறார் வள்ளுவர். அவர் வழி நின்று 'பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை' என வலியுறுத்திப் பாடுகிறார். ஆண் குழந்தை தாலாட்டில் 'சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில் கனலெற்ற வந்த களிறே' என்றும், பெண் குழந்தை தாலாட்டில் 'வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத் தூண்டா விளக்காய்த் துவங்கும் பெருமாட்டி' என்றும் சாதியைச் சாடும் இடங்கள் கருத்தில் மெருமாட்டி' என்றும் சாதியைச்சாடும் இடங்கள் கருத்தில் கொள்ளத்தக்கன. 'கடல் மேற்குமிழிகள்' என்னும் காவியத்தில்,

"மிக்குயர்ந்த சாதி கீழ்ச்சாதி என்னும்
வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க்கில்லை
பொய்க் கூற்றே சாதி எனல், ஆரியச்சொல்
புதுநஞ்சு! பொன் விலங்கு! பகையின் ஈட்டி"

என்று சாதியைக் கடுமையாகச் சாடுகிறார்.


(4-ம் பக்கம் பார்க்க)

# "காஞ்சி"

நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 :: ஆறுமாதச் சந்தா ரூ. 8
(மலர் உட்பட)

மலர்: 10 | 16—6—74 | இதழ்: 48

# வெற்றி நிச்சயம்!

**உடன் பிறப்பே!**

கழகக்குரலின் இரண்டாவது இதழ் உன் கரங்களை அணி செய்கிறது. மகிழ் கிறாய். மகிழ்கிறேன். நமது இலட்சிய விளக்கொளியாகத் திகழும் இந்தக் கிழமை ஏட்டினைப் பட்டிதொட்டியெங்கும் பரப்பிட வேண்டிய பணியை நீ தொடர்ந்து செய்திட வேண்டும். இந்த என் வேண்டுகோளை, கழகக் கண்ணின்மணியாகிய நீ, அலட்சியப் படுத்தாமல் நிறைவேற்றித் தருவாய் என்று நம்புகிறேன்.

நமது "மாநில சுயாட்சி" கீதம், அங்கிங்கெனுதபடி எங்கெங்கும் முழங்கிட வேண்டும். சட்டப் பேரவையில் நிறைவேற் றப்பட்ட தீர்மானம், இந்தியாவின் அரசியல் அரங்கத்தில் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது. நம்மீதுள்ள காழ்ப்பு காரணமாக நமது இலட்சியத்தை எதிர்ப் போர் இருக்கலாம். இருட்டடிப்பு செய் வோர் இருக்கலாம். அலட்சியப்படுத்துவ தாக நடிப்பதின் மூலம் நமது கோரிக்கையை தோற்கடித்துவிட முனையலாம். கேலிபேசி, சித்திரம் தீட்டி, தங்கள் மன எரிச்சலைப் போக்கிக்கொள்ள முயலலாம். ஆனால் இத் தனை வகையான எதிர்ப்புக்களையும் கடந்து, நமது கழகக் குரலும் மாநில சுயாட்சி முழக் கம் வெற்றி பெறத்தான் போகிறது என் பதை இன்றைக்கே எழுதி வைத்துக்கொள்.

தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதையைப் பார்த்து, "சே! இந்தச் சிறிய விதையா மரமாகப்போகிறது?" எனக் கேட்கும் தெளிவற்ற மனிதனிடம் அந்த விதைக் குள்ளேயே ஆலமரத்தைக் காட்ட முடியுமா என்ன?

இன்று நாம் நடுகின்ற மாநில சுயாட்சி விதை மக்கட்கு நிழலாகும் மாபெரும் ஆலமரமாக ஆகத்தான் போகிறது.

ஒரிசாவின் முன்னாள் முதல்வர் நண்பர் பட்நாயக் வந்தார். நீண்ட நேரம் விவா தித்தோம். ஒரிசாவில் நமது முழக்கத்திற்கு அவரது கட்சி முரசமாக இருக்கும். விரை வில் கர்நாடகத்திலும் நமது குரல், வலிமை யுடன் ஒலித்திட தலைமையொன்று அங்கே தோன்றிடக்கூடும். மாநிலங்களில் நமது குரல் ஒலிக்க எல்லா ஏற்பாடுகளும் நடை பெறுகின்றன. சென்னையில் இந்தத் திங்கள் இருபதாம் நாள் திரு. சுப்பாராவ் கலந்து கொள்கிற மாநில சுயாட்சி அரங்கு ஒன்று நடைபெற இருக்கிறது. நமது தில்லை வில்லாளன் அவர்கள் அமைத்துள்ள சுயாட்சி மன்றத்தின் சார்பில் அந்த நிகழ்ச்சி ஏற்பாடாகியிருக்கிறது. இதே திங்கள் இருபத்தி மூன்றாம் நாள்முதல் மாறன் முதலியவர்கள் பொறுப்பேற்று நடத்தும் "மாநிலசுயாட்சி மன்ற"த்தின் சார்பில், சுயாட்சி பற்றிய விளக்கங்கள் தருகிற வகுப்புக்கள் தொடர்ந்து நடக்க இருக்கின்றன.

ஆம், இந்திய மாநிலங்கள் முழுதும் சுயாட்சி பிரச்சாரத்திற்கான கருவிகள் தயாராகின்றன. இவை போர்க் கருவிகள் அல்ல! யாருடனும் நமக்கு மோதுதல் இல்லை. திருமதி இந்திராகாந்தி அவர்களிடம் நமக்கு அளவற்ற மதிப்பு, மரியாதை உண்டு. நம்முடைய விவகாரமே அரசியல் சட்டம் பெருமளவுக்கு மாற்றி அமைக்கப்பட்டு, மாநிலங்கள் தங்களுடன் நெருக்கியிருக்கும் மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கவகை செய்யப் படவேண்டுமென்பதை வலியுறுத்துவது தான். அந்த வெற்றிக்கான ஆரம்ப அறிகுறிகள் தெரிகின்றன. அண்ணா வழியில் அயராது உழைத்தால் அந்த வெற்றி நிச்சயம்.

அன்புள்ள,

**மு. க.**

—கழகத் தலைவர் கலைஞர் "கழகக் குரல்" ஏட்டின் 9—6—74 தேதிய இதழில் எழுதிய கடிதம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"சமத்துவப் பாட்டு" என்னும் தலைப்பில் 'சேரிப்பறையர், தீண்டாதார் என்பார் நம் உற்றார்' என்றும், 'ஆலய உரிமை தாழ்ந்தவர்க்கும் உண்டு' என்றும் அரிய கருத்துக்களை உரிய முறையில் நம் உள்ளத்தில் பதிய வைக்கிறார். மக்களில் சிலருக்கு ஆலய உரிமை மறுக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறார்.

"குக்கலும் காகமும் கோயிலிற் போவதிற்
கொஞ்சமும் திட்டில்லையோ?—நாட்டு
மக்களிலே சிலர் மாத்திரம் அந்த
வகையிலும் கூட்டில்லையோ?"

என்று பாடுகிறார். நாயும் காகமும் கோயிலுக்குள் போகலாம். ஆனால் மக்களில் சிலர் போகக்கூடாதா? என வெந்த உள்ளத்தோடு வினவுகின்றார். இக்காலத்தில் சமையல் முன்னேற்றமின்றித் தாழ்ந்து போனதற்குச் சாதியும் சமயமுமே காரணம் எனக் குற்றஞ் சாட்டுகிறார்.

"சமையல்முன் னேற்றமின்றித் தாழ்தற்கு
நமது நாட்டில்
சமயமும் சாதி என்ற சழக்கும்கா ரணம்என்
பேன்நான்
அமைவுறும் செட்டி வீட்டில் அயலவன்
உண்பதில்லை
தமைஉயர் வென்பான் நாய்க்கன், முதலி நீ
தாழ்ந்தோன் என்பான்"

என்று இன்றைய சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டி நமக்குப் பாடமும் புகட்டுகிறார் பாரதிதாசன்.

## 5. சமயம், மூடநம்பிக்கை, பழக்கவழக்கங்கள்

தொடக்க காலத்தில் சமுதாயத்தைச் சீர்திருத்தி நல்வழிப்படுத்தவே சமயம் தோன்றியது. ஏசுநாதர், மகமதுநபி, புத்தர் போன்றோரின் பொன்மொழிகள் பூவுலகம் உள்ளளவும் போற்றக் கூடியவையல்லவா? ஆனால், சமயத்தைப் பின்பற்றிய மக்களுடைய மனத்தில், மூடநம்பிக்கைகள் வளர்ந்தனவே ஒழிய முன்னேற்றம் அரும்பவில்லை எனப் பகுத்தறிவாளர் பலர் கருதத் தொடங்கினர். அந்தக் கண்ணோட்டத்தோடு மதத்தை அணுகியவர்களில் பாரதிதாசனும் ஒருவர். சமுதாயம் சீர்திருந்த வேண்டுமெனில் சமயபேதம் ஒழிய வேண்டும் என்ற கொள்கையினைக் கொண்டவர். தாலாட்டுப் பாட்டில், 'எல்லாம் கடவுள் செயல் என்று துடை நடுங்கும் பொல்லாங்கு தீர்த்துப் புதுமை செய வந்தவளாக'ப் பெண்குழந்தையினைத் தாலாட்டுகிறார். சமயத்தினால் சமுதாயத்திற்குத் தீங்குதான் விளையும் என்ற திடமான நம்பிக்கை உடையவர் அவர். குறிஞ்சித் திட்டில்,

"மதம் என்ற கருங்கற் பாங்கில் மல்லிகை
பூப்பதில்லை
மதியினில் மயக்கம் என்ற நஞ்சொன்றே
மலரும் நாட்டில்
புதியதோர் பொல்லாங் கென்னும் எரிமலை
புகையும்; மக்கள்
இதுநலம் இதுதீ தென்னும் எண்ணமும்
இழந்து போவார்"

என்று தன் கருத்தினை வலியுறுத்திப் பாடுகிறார். சமயத்தை வெறுத்துப் பாடினும் 'கடவுள் ஒருவர் உண்டு' என்பதனை ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் உருவ வழிபாட்டை ஒப்புக்கொள்ளவில்லை.

'உள்ளதொரு தெய்வம்—அதற்(கு) உருவம் இல்லை, தம்பி, என்று ஏற்றப்பாட்டில் தனக்கு ஏற்ற கருத்தினைத் தெரிவிக்கின்றார். மேலும் 'கடல்மேற்குமிழி'களில்,

"ஒரு கடவுள் உண்டென்போம்; உருவணக்கம்
ஒப்போம்!
உள்ளபல சண்டையெல்லாம் ஒழியும் மதம்
ஒழிந்தால்"

என்று குறிப்பிடுகிறார். ஒருவனே தேவன்; அவனுக்கு உருவமில்லை; சமயம் ஒழிந்தால் சண்டையும் ஒழிந்துவிடும் என்ற தன் எண்ணத்தைத் திண்ணமுடன் தெரிவிக்கிறார்.

சமுதாயத்தில் கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகவேண்டும் எனப் பெரிதும் விழைகின்றார்.

"மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவ தென்றோ? உயர்வதென்றோ?
நானறியேன்"

என்று உணர்ச்சியுடன் பாடுகிறார். ஒழுக்கம் இல்லாத பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டாம் என்று கட்டளையிடுகிறார்.

"வழக்கம் என்பதில் ஒழுக்கம் இல்லையேல்
கழுத்துப் போயினும் கைக்கொள்ள
வேண்டாம்"


என்று கூறும்போது, அவர் கையாளும் சொல்லாட்சியே அவர் உள்ள உறுதியை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

## 6. பெண்ணின் பெருமை

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்திச் சமுதாயத்தைச் சீர்திருத்தப் பல கவிதைகளை இயற்றினார்

(14-ம் பக்கம் பார்க்க)

# தம்பிக்கு மடல்



## தம்பி!

தம்பி! தேர்தலின்போது, நமது கழகத்தை இழித்தும் பழித்தும் பெரியாரின் படை பேசியபோதும், மனம் குமுறிய பலர் என்னிடம் கூறினர்—என்னிடம் கூறுவானேன் ஐயா! என் செவிக்கேதான் அந்தச் சங்கீதம் நித்த நித்தம் கேட்கிறதே என்று சொன்னேன்; இப்படி வரைமுறையின்றி வாய்க்கு வந்தபடி பேசுகிறார்களே, இதை அனுமதித்துக்கொண்டே போவதா என்று கேட்டனர்; நாம் அனுமதிப்பதாவது தடுப்பதாவது. இந்த இழுமொழிகளைத் தாங்கிக் கொள்வதற்கான நெஞ்சு உரத்தை நாம் பெறவேண்டும் என்று பதிலளித்து அனுப்பினேன். பிறகு நானே யோசித்தேன்—ஏன் அவ்விதமாகப் பேசுகிறார்கள் என்று, எனக்கு, தம்பி! பேசுபவர்களின் நிலைபுரிந்தது—புரிந்ததால் எனக்கு அவர்களிடம் இருந்த 'கொஞ்சநஞ்சம்' கோபம் கூடக் குறைந்தது, அனுதாபம் ஏற்பட்டது. அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள வேலையும், தமக்கென்று மேற்கொண்டுவிட்ட போக்கும், வேறு விதத்தில் முறையில், பேசவைக்கவில்லை—முடியவில்லை.

புலிவேடம் போட்டுக்கொண்டு பரத நாட்டியம் ஆட முடியுமா? கற்பனை செய்து பாரேன்!!

புலிவேடம் போட்டு ஆடுவது என்றால், அதற்கான விதத்தில் தாவியும் பாய்ந்தும், பதுங்கியும் உலுக்கியும், 'ஜகா' வாங்கியுந்தான் ஆடவேண்டும்—ஆடமுடியுமே தவிர, பரதநாட்டிய பாணியிலா ஆடிக்காட்ட முடியும்!!

அதுபோலத்தான், தம்முடைய கொள்கைகளுக்கு ஆதரவு திரட்டுவது என்ற வேலையை விட்டு விட்டு, அல்லது மூட்டை கட்டி ஒருபுறம் வைத்துவிட்டு, யார் பேரிலோ எதற்காகவோ ஏற்பட்டு விட்ட ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துக் கொள்வதற்காக, வேறுயாருக்கோ 'அடி ஆளாகப்போகத் துணிந்துவிட்ட பிறகு, அதற்குத்தகுந்த 'பாஷை'தானே இருக்கும்-வேண்டும்—பிறக்கும்—மணக்கும்!

எத்தனை எத்தனை ஏற்புடைய கொள்கைகளை, எவ்வளவு எழிலுடன் எடுத்துக் கூறிவந்தவர், இன்று இப்படிப்பட்ட 'பாஷை'யில் பேசவேண்டி நேரிட்டு விட்டது என்று எண்ணியபோது, உண்மையிலேயே நான் அனுதாபப்பட்டேன்.

அந்த நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள், இப்போதும் அதேமுறையில் பேசுகிறார்கள்-தமக்கென வேறு புரட்சிகளைக் கண்டு பிடித்து செயல் படுகிறவரையில் இதே 'பாஷை' தான் இருக்கும்.

பொதுவாகவே, அரசியல் நிலைமைகளுக்கான ஆய்வுரைகளையும் தீர்ப்புகளையும், அவ்விடமிருந்து எதிர்பார்த்தால், எரிச்சலும் ஏமாற்றமும்தான் கிடைக்கும். அல்லிப் பூவில் மல்லிகை மணம் கிடைக்காது!

ஆனால், அரசியற் குறிகளைக் கண்டு காலத்தைக் கணிப்போர், காங்கிரசுக்குப் பல்வேறு பகுதிகளிலே ஏற்பட்டிருக்கும் 'சரிவு சிதைவுகளை' சுட்டிக் காட்டுகிறார்கள்.

தம்பி! தேர்தலென்பதே ஒரு பித்தலாட்டம்-அதில் ஈடுபடுபவர்கள் அனைவருமே

# படமும் பாடமும் (3)

அயோக்கிகள் — ஓட்டர்கள் எல்லாருமே அப்பாவிகள்—என்ற 'அருமை'யான தத்துவத்தையும் கண்டறிந்து கூறிக்கொண்டு, அந்தத் தேர்தலில், ஓட்டுக் கேட்பதற்காக யார் பின்னேடு சென்றால், மனதுக்கு இலாபகரமான சந்தோஷம் கிடைக்கும் என்று இருந்தவர்களின், பேச்சும் போக்கும், தொல்லை நிரம்பிய வாழ்க்கையில் தவிக்கும் மக்களுக்கு, ஒரு பொழுதுபோக்காகிவிட்டது எனவே, அது குறித்து நாமும் அதிகமாகக் கவனிப்பதற்கில்லை!!

நாம் பெற்ற வெற்றிகள், கம்யூனிஸ்டு கட்சி கேரளத்தில் பெற்றுள்ள மகத்தான வெற்றி, கணதந்திரபரிஷத் ஒரிசாவில் பெற்ற கவலையூட்டும் வெற்றி, மராட்டிய மண்டலத்திலே சமிதி பெற்றுள்ள வசீகர மிக்க வெற்றி, அசாமில் மலைநாடு பெற்றுள்ள குறிப்பிடத்தக்க வெற்றி— இவைகளுக்கான காரணங்களைச் சிலர் உள்ளபடி கண்டறிந்தாகவேண்டுமென்று முயலுகின்றனர்.

அந்தச் சிரமம் நமக்கேன் என்று கருதும் போக்கினர்—காட்டுத் தீ—கடுவிஷம்— என்று சுடுசொல் கூறிவிடுவதன் மூலம் தமது வேலை முடிந்துவிட்டதாகக் கருதுகின்றனர்.

பீகார் மாநிலத்திலிருந்து வெளிவரும், இந்தியன் நேஷன் எனும் ஆங்கில இதழ், இது குறித்து வழங்கியுள்ள ஆய்வுரை சுவையும் பயனும் உள்ளதாக இருந்திடக் கண்டேன். கேரளத்தில் கம்யூனிஸ்டு கட்சி பெற்ற வெற்றி பற்றியே அந்த இதழ் ஆய்வுரை அளித்திருக்கிறது - என்றாலும், பொதுவான அரசியல் விளக்கமும், தத்துவவிளக்கமும் அதிலே இருந்திடக் காண்கிறேன்,

ஆரிய—திராவிடப் பிரச்சினை என்பது அபத்தம் என்பாரும்,

ஆரிய—திராவிடப் பிரச்சினை ஆபத்தானது என்பாரும்,

ஆரிய—'திராவிடப் பிரச்சனை என்பது' புதைகுழியைத் தோண்டிப் பார்த்திடும் போக்கு என்பாரும், உண்டல்லவா?

'காங்கிரசு கட்சி மட்டுமல்ல' வெற்றி பெற்ற கம்யூனிஸ்டு கட்சியே கூட, ஆரிய—திராவிடப் பிரச்சினையை, கேவலமானது, கேடு பயப்பது என்று சில வேளைகளிலும், இல்லாதது இடுக்கட்டியது என்று சில நேரங்களிலும், பேசிடக் கேட்கிறோம்.

நமது 'கம்யூனிஸ்டு நண்பர்கள்' திடுக்கிட்டுப் போவர் என்று எண்ணுகிறேன், 'இந்தியன் நேஷன்' இதழ் தரும் ஆய்வுரையைக் கண்டால்.

தம்பி! இதழ் 'பாட்னு'விலிருந்து வெளியிடப்படுகிறது, காஞ்சிபுரத்துக்காகிதமல்ல!

கம்யூனிஸ்டு கட்சி கேரளத்தில் வெற்றி பெற்றதற்குக் காரணம் கேரளத்தில் உள்ள திராவிட உணர்ச்சிதான் என்று அந்த இதழ் எழுதுகிறது:

Kerala is a small reorganised state in the South.

கேரளம், தெற்கே உள்ள புதிதாக உருவாக்கப்பட்ட அரசு.

The basis of her culture is Dravidian

அதன் அடிப்படை திராவிடப் பண்பாடு.

இந்த எழுத்துக்களைப் படிக்கும்போதே, மற்றவர்களுக்கு ஏற்படுவதைவிடக் கம்யூனிஸ்டுகளுக்கு எரிச்சல் இருக்கும்—திராவிடமாவது ஆரியமாவது—என்று முணு முணுப்பர். ஆனல் 'இந்தியன் நேஷன்', பண்பாடுகளுக்குத் தக்கபடிதான் அரசியல் மாற்றங்கள், இப்போது ஏற்பட்டுள்ளன என்பதை எடுத்து விளங்குகிறது.

In our analysis there are historical reasons for the growing Communist influence in the Nonbraminical belt of India

பார்ப்பனரல்லாதார் வாழும் இந்திய பகுதிகளிலே கம்யூனிஸ்டு செல்வாக்கு வளர்ச்சி அடைந்து வருவதற்கு சரித்திர பூர்வமான காரணங்கள் இருப்பதை, ஆராய்ந்தறிகிறோம்.

To be precise, the Communist party is showing better results in the Non—Aryan belt

குறிப்பாகக் கூறுவதானல், கம்யூனிஸ்ட்டு கட்சிகள் ஆரியமல்லாத பகுதிகளிலேதான் நல்ல பலன்கள் கிடைத்து வருகின்றன!

There marked influence of communist in South of Statel in Bengal which may be taken as Non-Aryan Belt.

தென்னரசுகளிலும், வங்காளத்திலும், கம்யூனிஸ்டுக்கு சிறப்பான செல்வாக்கு இருக்கிறது.

# காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்!
# காசுள்ளபோதே சேர்த்துக்கொள்!!

" எச்செலவும் வருவாய்க்குள் பண்ணவேண்டும்,
எதிர்காலத் தேவைகளை எண்ண வேண்டும்,
மிச்சமென்று சிறிதேனும் சேர்த்து வைத்தால்–
மீறி ஒரு துன்பம்வரின் தீர்த்து வைக்கும்! " —நாமக்கல் கவிஞர்.

**எனவே,**

சம்பாதித்துக் கொண்டிருக்கும் பொழுதே தொடர்வைப்புத் தொகைத் திட்டத்தில் (ரிகரிங் டெபாசிட் திட்டம்) அல்லது வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தில் (க்யுமுலேடிவ் டைம் டெபாசிட் திட்டம்) ஒரு கணக்கைத் துவக்கி மாதம் 5 அல்லது 10 ரூபாய் வீதம் கட்டிட முன் வாருங்கள். இத்திட்டங்களின்கீழ் செலுத்தும் தொகை பின்கண்டவாறு பெருகும்!

| மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| **தொடர்வைப்புத் தொகை திட்டம்** | | |
| ரூபாய் 5. | ரூபாய் 360 | —— |
| ரூபாய் 10. | ரூபாய் 720 | —— |
| **வளரும் மாதச் சேமிப்புத் திட்டம் :** | | |
| ரூபாய் 5. | —— | ரூபாய் 785 |
| ரூபாய் 10 | —— | ரூபாய் 1,570 |

தொடர்வைப்புத் தொகைத் திட்டத்தின்கீழ் 1—7—72க்குப் பிறகு கணக்குத் துவங்குகின்றவர்கள் எதிர்பாராதவிதமாக இறந்து விட்டால், 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களுடைய வாரிசுதார்களுக்குக் கிடைக்கும். சிறு சேமிப்பு செய்பவர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது.

**★ இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்! ★**

— சிறுசேமிப்புத்துறை,
தமிழ்நாடு அரசு.


–இந்த இடங்களை ஆரியரல்லாதாரின் வட்டாரங்கள் என்று குறிப்பிடலாம்.

செச்சேச்சே! இதென்ன இந்தக் கழகத்தார், பாட்டுவிலுள்ளவர்களைக்கூடவா, கெடுத்து விட்டார்கள், பார்ப்பனர்—அல்லாதார்! ஆரியர்—திராவிடர்! ஆரியபூமி, திராவிடத் தரணி! என்ற பைத்தியக்காரத்தனமான பேச்சு, பாட்டுவில்கூடவா எழுதுவது!—என்று கை பிசைந்துகொண்டும், சிலர் கூவக்கூடும். 'இந்தியன் நேஷன்'—கேரளம் திராவிடப் பண்பாடு. மிகுந்த இடம் அங்கு கம்யூனிஸ்டு கட்சி வெற்றி பெற்றதற்குக் காரணம் அதுதான், என்று கூறிவிட்டு அதற்கான விளக்கம் தராமலில்லை. ஆரிய கலாச்சாரம், திராவிடப் பண்பாடு, என்பவையின் அடிப்படை பற்றிய விளக்கம் அளிக்கிறது.

The Aryan mind which may be Characterised as the Brahminical mind which may be sharp but it is rigid. It is burdened with rites and tahos. It may be mataphysical but it is not emotional and as such it is not very receptive

ஆரிய மனப்பான்மையை பிராமண மனப்பான்மை என்று கூறலாம் அந்த மனப்போக்கு, கூர்மை நிரம்பியதாக இருக்கலாம்; ஆனால் அது வளர்ச்சிபெற மறுக்கும், ஆழ்ந்துவிட்ட நிலையில் உள்ளது தடை விதிகளையும் சடங்குகளையும் சுமந்து கொண்டிருப்பது. வேதாந்தப் போக்கினதாக இருக்கலாம். ஆனால், எழுச்சிக்கு இடமளிப்பதில்லை; எனவே புதிய கருத்துகளை வரவேற்று ஏற்றுக்கொள்ளும் வளம் ஆரியமனப்பான்மைக்கு இல்லை.

The Non-Arya mind is definitely emotional

ஆரியரல்லாதார் மனப்பான்மை நிச்சயமாக எழுச்சி மிக்கது. [வளரும்]

சிறுகதை :

# முல்லைக்கொடி

கவிஞர். பி. சி. அசனல்லி

அரக்கோணம் பஸ் நிலையத்தில் காஞ்சிபுரம் போவதற்காக மோகன் நின்றிருந்தார். யக்களின் ஆரவாரத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த அவருக்குப் பக்கத்தில் ஒரு பெண் வேகமாக நடந்து வந்து மூச்சிறைக்க நின்றாள்.

செவ்வாழைப் போன்ற உடலில் பனி முத்துக்களைப் போன்று வியர்வைப்படிய, ரோஜாமலர் போன்ற முகம் மேலும் சிவக்க, வெண்டை விரல்கள் நடுங்க. "சார், என்னை ஒரு முரடன் துரத்திக்கொண்டு வருகிறான். தயவுசெய்து அவனிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்" என மோகனை அவள் கெஞ்சினாள். மோகனுக்கோ ஒன்றுமே புரியவில்லை. இருப்பினும் ஆபத்திலிருக்கும் அந்தப் பெண்ணை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவருக்குத் தோன்றியது. அதற்குள் அவளைத் துரத்திக் கொண்டு வந்த போக்கிரி பக்கிரி சாமி மோகனைக் கண்டதும் கைகூப்பி வணங்கி," இன்ஸ்பெக்டர் சார், இவள் ஒரு விபச்சாரி. இவளை நீங்களே கவனித்துக் கொள்ளுங்கள்" என்றுகூறி மீண்டும் வணங்கி அவன் சென்று விட்டான்.

"இவள் ஒரு விபச்சாரி...இவள் ஒரு விபச்சாரி"—இந்த வார்த்தைகள் கொந்தளிக்கும் கடல் அலைகள் கரையை வந்து மோதுவதுபோல இன்ஸ்பெக்டர் மோகனின் மனத்தில் மோதிக்கொண்டிருந்தன. அந்தப்-பெண்ணை மீண்டும் உற்றுநோக்கினார். அவர் முகத்தில் கோபக் கனல் வீசியது. அந்தப் பெண்ணோ இன்ஸ்பெக்டரின் காலில் விழுந்து "சார் எனக்காக நீங்கள் கொஞ்சம் இப்படி வாங்க" எனச் சுற்றும் முற்றும் பார்த்தவாறே கெஞ்சினாள். மோகன் அவளைத் தனியாக அழைத்துக்கொண்டு போனார். அந்தப் பெண்ணோ தனிமையில் "ஓ"வெனக் கதறிக் கதறி அழுதுகொண்டே, "சார், சொன்னால் புரியாதுசார் என் சோக வரலாறு, சிறுவயதிலேயே என் பெற்றோரைப் பறிகொடுத்த நான் என் தாத்தாவின் ஆதரவில் வளர்ந்தேன் பி.ஏ. வரைப் படித்தேன். எனக்குத் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என விரும்பிய என் தாத்தா சென்ற வாரம் திடீரென்று கண்ணை மூடிவிட்டார். ஆதரவற்ற அனாதையானேன்" தேம்பித் தேம்பி சிறு குழந்தைபோல அழுதாள். தன் துக்கத்தை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "பட்டதாரியான நான் வேலை தேடி அலைந்தேன். வேலை கிடைக்கவில்லை. இப்பொழுது உங்களிடம் என்னை "விபச்சாரி" என அறிமுகப்படுத்தி விட்டுச் சென்றானே பக்கிரி, அவன் வேறுயாருமில்லை. என் அத்தை மகன்தான் சொந்தக்காரனாயிற்றே என நினைத்து அவனிடம் ஏதாவது வேலைத்தேடித் தருமாறு கேட்டேன். அவனும் அதற்குச் சரியெனச் சொல்லி இன்று ஏதோ ஒரு கம்பெனியில் வேலைகிடைக்கத்தான் ஏற்பாடு செய்திருப்பதாகவும், அந்தக் கம்பெனியின் முதலாளிக்கு என்னை அறிமுகப்படுத்துவதாகவும் கூறி அழைத்துச் சென்றான். நானும் அவனை நம்பி உள்ளே சென்றேன்...' கொத்தவரும் பாம்பைக்கண்டு பயப்படுவதைப் போல அவள் மிகவும் பயந்தவாறே அழுதாள். "அது கம்பெனி இல்லேசார். மானத்தை மரியாதையை விற்றுப்பிழைக்கும் வெறிக்கூடம். அந்தக் கம்பெனி முதலாளி என்னை நெருங்கி வந்தான். நான் 'பக்கிரி' என்று கத்தினேன். பக்கிரி காணவில்லை. நான் நெருப்பானேன். அவனோ என்னை இறுக அணைக்கவந்தான். நான் வெளியில் வர ஓடினேன். என் ஜாக்கட்டைப் பிடித்து இழுத்தான். இதோ பாருங்கள்... எனத் தன் சேலையால் மூடிய ஜாக்கட்டைக் காட்டினாள். அதைப்பார்த்த இன்ஸ்பெக்டருக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

அந்தப் பாவி என் கற்பைச் சூறையாட ஓடிவந்தான். நானோ எனக்கே உரிய முழு பலத்தையும் ஒன்றாகச் சேர்த்து ஓங்கி அவன் வயிற்றில் ஒருகுத்து விட்டேன். அவன் கீழே "தொபீ"ரென விழுந்தான். அதற்குள் நான் அந்த வெறிக் கூடத்தைவிட்டுத் தப்பித்துவிட்டேன். இந்தப் பக்கிரிசாமியை என் பின்னால் அனுப்பி என்னைப் பிடித்துவரச் சொன்னான். அதனால்தான் நான் வேகமாக வந்து உங்கள் அருகில் நின்றுவிட்டேன். எப்படியோ அந்தக்—கொடிய மிருகத்திடமிருந்து என் கற்பைக் காப்பாற்றி விட்டேன். என்னையே நம்பிக்கொண்டிருக்கும் என் காதலர்க்கு நான் துரோகம் செய்யவில்லை சார்" எனத் தேம்பித் தேம்பி அழுதாள்.

"சரிம்மா, நீ இப்பொழுது எங்கேபோகப் போகிறாய்?" எனக்கேட்டார். இன்ஸ்பெக்டர் "காஞ்சிபுரம் போகவேண்டும். சார் இதோ பாருங்கள் இவர்தான் என் காதலர் மிகவும் நல்லவர்" என்றவாறே ஒரு புகைப்படத்தை இன்ஸ்பெக்டரிடம் காட்டினாள். அதைப் பார்த்த இன்ஸ்பெக்டர் தேள் கொட்டியவர் போல ஒரு நிமிடம் அதிர்ச்சியடைந்தார்.

தயாராகிறது!

# 'காஞ்சி'

## கலைஞர் பொன்விழா மலர்.

**பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றல்
கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களின்
புகழ்மணம் பரப்பும் நன்மலர்,
இப் பொன்மலர்!**

**முன்னணித் தலைவர்கள்
முற்போக்கு எழுத்தாளர்கள்**

**ஆகியோரது அரிய படைப்புக்களுடன்
மூவண்ண முகப்போடு ஜூன் திங்கள் 30-ம் நாள் வெளிவருகிறது!**

தேவைக்கு உடன் தொடர்பு கொள்க:-

—மேலாளர் "காஞ்சி"
காஞ்சிபுரம் 631503.


"சரிம்மா, நானும் காஞ்சிபுரந்தான் போகிறேன். உன்னை மிகவும் பத்திரமாக உன் காதலரிடம் சேர்த்து விடுகிறேன் உன்னைப் பாதுகாக்க வேண்டியது என் கடமை" என்றார் மோகன். "ஆமாம், உன் பெயர் என்ன?" என்று கேட்ட இன்ஸ்பெக்டரிடம் என் பெயர் "முல்லைக்கொடி" எனச் சொலிச் சிரித்தாள். "உன் காதலர் பெயர்...?" "இளஞ்செழியன்" எனச் சொல்லிய முல்லைக் கொடி வெட்கத்தால் தலைகுனிந்தாள்.

ஊர்ப்பேர் தெரியாத உன்னை என் மகன் இளஞ்செழியனுக்கு மணமுடிப்பதா? இந்தாம்மா நீ அவனை மறந்திடு. இங்கே இருந்து உடனே போயிடு. அவனுக்கு ஒரு நல்ல இடத்துலே அழகான பெண்ணைப் பார்த்திருக்கிறோம். நல்லவேளை அவனும் இங்கே இல்லே. ஊம் கேட்அவுட்" என கர்ஜித்தார் இளஞ்செழியனின் தந்தை தனஞ்செழியன். பாவம் முல்லைக்கொடி துவண்டுவிட்டாள். யார் தனக்கு வாழ்வளிக்க முன்வருவாரோ என நம்பியவளுக்கு இளஞ்செழியனின் தந்தையே தன்னை விரட்டும்பொழுது அவளுக்கு எப்படி இருக்கும்?" என் அப்பாவின் பேச்சை நான் எப்பொழுதும் தட்டியதே கிடையாது; இனியும் தட்டமாட்டேன். என் அப்பாவின் சம்மதம் பெற்று உன்னை மணந்துகொள்வேன்" என எப்பொழுதோ இளஞ்செழியன் சொன்னது அவளின் நினைவிற்கு வந்தது. மீண்டும் "ஓ" வெது அழுது அவரின் காலில் விழுந்தாள். தனஞ்செழியனோ, "சீ இங்கிருந்து போகப்போகிறாயா? இல்லை போலீஸை வரவழைக்கட்டுமா? என்றார்.

"அதற்கு அவசியமே இல்லை மாமா. இந்த இளஞ்செழியனுக்கேற்ற பொருத்தமான மனைவி இந்த முல்லைக்கொடிதான்" எனச் சொல்லிக் கொண்டே இளஞ்செழியனுடன் உள்ளே வந்தார் இன்ஸ்பெக்டர் மோகன். "என்ன மாப்பிள்ளை சொல்லுகிறீர்கள்?" என்றார் தனஞ்செழியன். நடந்தவைகள் அனைத்தையும் கூறினாள் இன்ஸ்பெக்டரின் மனைவி கொடிமலர். "அப்பா! இளஞ்செழியனும் முல்லைக்கொடியும் ஒருவரையொருவர் விரும்புகிறார்கள். உடனே திருமணத்தை முடித்துவிட வேண்டியதுதான். என்னப்பா சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள் கொடிமலர்.' நான் என்னம்மா சொல்லப் போகிறேன். என் மாப்பிள்ளையே பார்த்து முடிவு செய்த பிறகு உடனே திருமணத்தை நடத்திவிட வேண்டியதுதான்" என்றார் தனஞ்செழியன். அனைவரும் மகிழ்ந்தனர். நன்றிப்பெருக்கால் கண்ணீர்மல்க இன்ஸ்பெக்டரை நோக்கினாள் முல்லைக்கொடி.

★

அரசியல் அரங்கம்:

# "கோடும்பாவிகள்"

போடிப் புலவன்

இது தமிழகம்தான்!!

என்ன செய்வது?

அரசியலில் புதியதாக நுழைந்திருந்திருக்கும் புரட்சிகளின் விளைவுகள் நம்மை மிரட்டும் பொழுது நமக்கு 'இது தமிழகந்தானு?' என்ற ஐயம் ஏற்படுகிறது.

ஐயம் அப்போதைக்குத் தெளிவடையும் போது 'இது தமிழகந்தான்' என்ற நம்பிக்கை நமக்கு உண்டாகின்றது.

ஆம்! இது தமிழகந்தான்!

இதற்கென்று உள்ள சிறப்புகள், பிற மாநிலங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது உயர்ந்து நிற்கின்ற காரணத்தினுல்தானே 'தமிழ்ப்பண்பாடு' என்ற ஒரே சொல்லே நல்லோரால் உருவாக்கப் பட்டுள்ளது.

அந்த அருமையான சொல் இன்னும் கொஞ்ச நாளைக்குள் தற்கொலை செய்து கொள்ளப் போகின்றது என்பதை மட்டும் எவராலும் மறுக்க முடியாது.

அகில இந்திய அரசியலில், பிறமாநிலங்களில் 'ஆயாராம் காயாராம்'களும், சட்டப் பேரவை அடிதடிகளும், ஆறு மணிக்குள்ள ஆட்சி ஆறறைக்கு இல்லை அரசியல் விநோதங்களும் ஆட்டம் போட்டபோதும் தமிழகம் மட்டும் தன் 'தரத்தைத்' தாழ்த்திக் கொள்ளவில்லை.

அந்தத்தரம் சில 'கோரங்களால்' கோரமாகக் கொலை செய்யப்படப் போகிறது என்பதை எவராலும் மறுத்துரைக்க முடியாது.

வரலாற்றில் இடம் பெறத்தக்க, தங்களுக்கென்று ஒழுங்கான பாரம்பரியங்களைக் கொண்ட கட்சி வஸ்தாதுகள், அரசியல்' கோதாக்களிலே இறங்கிய காலத்தில் 'மோதலின் தரம்' முத்தாக இருந்தது.

ஆம்!

சிங்கங்கால்கள் மோதிய காடுகளில், காலத்தில் கொடுமை 'கண்ட கண்டதுகளின்' சண்டைகள் காடுகளின் சிறப்பைக் கண்ட துண்டங்களாக்கி விட்டன,

அன்னங்கள் மோதிய பொய்கைகளாக இருந்த அரசியல் மன்னிக்கவும் இன்று சாக்கடையாக மாற. சாபத்தைப் பெற்று விட்டது.

'தலை'வெட்டியான்கள் சுடுகாட்டில் இருக்கவேண்டிய காலம்போய், கோட்டையைக் காவல்புரிய 'குடலை அறுப்போம், கொலை செய்வோம்' என்று குரல் கொடுக்கும் காலம் வருமானுல் பண்பாடு பிழைப்பதேது? தரம் வாழ்வதேது?

அரசியம் தலைவர்களைப் பற்றியும், அவர்தம் கொள்கைகளைப் பற்றியும் திறனாய்வு செய்வதும், மதிப்பீடு காண்பதும் தவறல்ல. ஆனுல், கொள்கை மாற்றங்களால் ஏற்படும் கோபதாபங்கள், ஒரு சராசரி மனிதனுக்கு இருக்கவேண்டிய மனிதாபிமானத்தைக் கொலைசெய்வதாக அமைந்து விடக்கூடாது.

எதிர்வீட்டுக்காரன் எதிரி என்பதாலேயே, அவன் வீட்டில் மணமேளம் ஒலிக்கும்போது தெருவில் இருந்துகொண்டு 'பஜாரி'களை விட்டு ஒப்பாரிவைக்கச் சொல்லக் கூடாது.

மாலை நேரக் கூட்டங்களில் எதிர்க் கட்சித் தலைவரை விமரிசனம் செய்வதாலேயே காலையில் அவரைச் சந்திக்கும்போது கைகுலுக்கக் கூடாது என்பது மரபல்ல!!

வேறு கட்சிக்காரன் வீட்டுத் திருமணத்திற்கு அடுத்த கட்சிக்காரன் போகக்கூடாது என்பது பண்பல்ல!!

மிகமிகச் சாதாரணமான இந்த உண்மை, சில 'மேனிமினுக்கிகளால்' உருக்குலைக்கப் படுவதை எண்ணும்போது 'இது கெடுவது காட்டும் குறி' என்பதை நம்மால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

நான்கு பேரால் ஒருவன் மதிக்கப்படும் போது அவன் தலைவனுகிருன்.

அந்தத் தலைவன், ஏதாவது ஒருவகையில் நாட்டின், மொழியின், சமுதாயத்தின் நலன்களுக்குப் பாடு 'பட்டவனுகக்' கருதப் படும்போது கொள்கையால் மாறுபட்டிருப்பவர்களுக்கும் மதிப்பிற்குரியவனுக ஆகின்றுன்.

எனவே, மாறுபாடுகள் மரியாதை கொடுப்பதற்கும், மதிப்பதற்கும் தடையாக இருப்பதில்லை. ஏன்? அரசியலில் நேற்று வரை இருந்ததில்லை!!

நம் நாட்டின்மேல் படையெடுக்கும், எதிரி நாட்டை ஆள்பவனுக்குப் பிறந்த

நாள் என்றால் நம் நாட்டுப் பிரதமர் வாழ்த்துரைக்க மறுப்பதில்லை!!

இது உலகம் கண்ட பேருண்மை!!

இன்று நடப்பதென்ன?

தமிழ் நாட்டின் முதலமைச்சருக்குப் பிறந்தநாள் வருகிறது! அதுவும் ஐம்பது நிறைந்த பொன்விழா நாள்!!

அவர் ஒரு கட்சியின் தலைவர் என்கிற முறையில் அந்தக் கட்சியின் தொண்டர் களுக்கே உரியவர் என்றாலும், முதலமைச்சர் என்னும் நிலையில் எல்லோர்க்கும் பொது வானர்.

இதுதான் அரசியல் தருமம்!

எனவே, பிறந்த நாளின்போது கட்சித் தொண்டர்கள் தம் தலைவனை உரிமை யோடும், உறவோடும் பெருமையோடு வாழ்த்தினாலும், பிறகட்சித் தலைவர்களும் தொண்டர்களும், அரசியல் தொடர்பே இல்லாதவர்களும் பண்போடு தாங்கள் அன்பைக் காட்டிக்கொள்ள வாழ்த்துரைக் கின்றார்கள்.

இதுதான் அரசியல் நாகரீகம்.

இந்த நாகரீகம், பிறந்தநாள் வாழ்த் துரைக்கும் பண்பாடு இன்றுவரை உலகத்தில் சாகாமல் இருந்து வருகிறது.

எந்த அரசியல் இயக்கங்களும் இந்த மனிதாபிமானச் செயலிலிருந்து மாறியதாக வரலாறில்லை!!

என்ன செய்வது?

எதையும் புதுமையாகவே செய்யப் புறப்பட்டிருக்கும் புரட்சிவாதிகள் இதிலும் புதுமை செய்துவிட்டார்கள்.

ஒரு அரசியல் இயக்கத்தின் தலைவனின் பிறந்த நாளின்போது, ஒரு நாட்டின் முதலமைச்சரின் பொன்விழாவின்போது கருப்புப் பட்டை அணிந்தும், கொடும்பாவி கொளுத்தியும் அண்ணாவின் தம்பிகள் என்று அடையாளங் காட்டிக் கொண்டுள் ளார்கள்.

அண்ணாதான் மறைந்து விட்டாரே!

எழுந்துவந்து இழிசெயல் செய்பவனை என் தம்பி என்று சொல்லப் போவதில்லையே!!

'அடப்பாவிகளா, செய்வதையும் செய்து விட்டு என்னையா இழுக்கிறீர்கள்?' என்று கேட்கப்போவதில்லையே!!

அண்ணாவின் பெயரால், பிறந்த நாளில் கொடும்பாவி கொளுத்தல்' என்னும்போது உடம்பே நடுங்கிறது!!

கொடும்பாவி கொளுத்தப்படும் என்ப தற்குக் காரணம் உண்டா? ஆயிரம் காரணங்களைத்தான அடுக்க முடியாது.

அதுவும், 'வீட்டைக் கட்டிய பிறகு அடிப்படை போடுவேன்' என்னும் அறிவாளிகளுக்கா காரணங்கள் கிடைக் காது!!

கொடும்பாவி கொளுத்துவது என்று முடிவெடுத்துக் காரணம் தேடித்திரியும் 'கசங்'கள், அண்ணாவின் பெயரால் 'இசங்' களைக் கூறுவது இன்னும் எத்தனைக் காலங்களுகோ!!

கொடும்பாவி கொளுத்திய கொடும் பாவிகளே! நீங்கள் வைத்த தீ தமிழர் வரலாற்றில் வைத்த நெருப்பாகும்!

நாகரீகச் சோலைக்கு, பண்பாட்டுத் தோப்புக்குத் தீவைத்த தீயர்களே!

எஃகுக் கோட்டையை எலிகளா தகர்க்கும்!!

எங்கள் கலைஞரின் தியாகத்தை உங்களாளா அழிக்கமுடியும்!!

வெல்க அண்ணாவின் கொள்கைகள்!!

வெல்க கலைஞர்!! வாழ்க கலைஞர்!!

★

உனக்கு ஏதாவது ஆபத்து வரும் போது உனது உறவினர்களின் போக்கை நன்கு கவனி; உனக்குப் பயத்தை அளிக்கும் சந்தர்ப்பங்களில் உன்னுடைய மெய்காவலர் களின் செயலைக் கவனி; நீ தரித்திரத்தில் மூழ்கித் தவிக்கும்போது உன்னுடைய மனைவியின் நடத்தையை ஆராய்ந்து பார்!

# கண்ணதாசன் செய்வாரா?

இல. ஆலயபழகன்

அருமையான கவிதைகளை எழுதுகின்ற ஒரு பெருங் கவிஞன் அசிங்கத்தனமான அரசியல் கோமாளியாகவும் நடந்துகாட்ட முடியும் என்பதனை நிரூபணம் செய்துகொண்டிருப்பவர் கண்ணதாசன்.

எட்டாதத் திறமைபெற்ற இலக்கியச் சொற்பொழிவாளர்களில் ஒருவன் ஈனத்தனமான அரசியல் கொள்கைக்கு சொந்தக்காரனுக முடியும் என்பதை உலகுக்கு உணர்த்திகொண்டிருப்பவர் கண்ணதாசன்.

'இன்று பேசுவதும், இன்று எழுதுவதும் நாளை பொழுதுக்குச் சொந்தமல்ல' என்ற புதிய சிந்தாந்தத்திற்கு உருவமளிப்பவராக, கண்டவர் சிரிக்க, பார்த்தவர் நகைக்க அரசியல் பண்பாட்டைச் சிதைத்துக் கொண்டிருப்பவர் கண்ணதாசன்.

ஆம்! நண்பர்களே! சமீபத்தில் அவர் நடிகர் ராமச்சந்திரனை நோக்கி கட்டாரிகளைக் கைகளில் ஏந்திகொண்டு களம் சென்ற போக்கும், வீர நடையும், ஏறுமொழிகளும் இன்று புற முதுகிட்டு ஓடுகின்ற போர்ப் பரணியும் உலகத்தாரை விலாவெடிக்கச் சிரிக்க செய்திருக்கின்றன.

சமீபத்தில் சென்னையில் நடந்த 'தமிழர் பாதுகாப்புப் பேரவை' ஊர்வலம் ஒன்றில் சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. என்ருலும், அது கண்டிக்கப்பட வேண்டியதே என்ருலும் அதன் ஆக்க பூர்வமான தமிழ் உணர்ச்சியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆம்! "தமிழ்நாட்டில்" தமிழனுக்கே முதலிடம் தேவை என்பதே அந்தப் பேரவையின் அழுத்தமான அடிப்படைக் கருத்தாகும்.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி'' என்பார்கள். அதுபோல வரிந்து கட்டிக்கொண்டு ராமச்சந்திரனை எதிர்த்த கண்ணதாசன் தமிழர் பாதுகாப்புப் பேரவையின் சிறிய நிகழ்ச்சிக்கு குய்யோ முறையோ என்று அலறுவதின் அவசியம் என்னவோ? அறிய விரும்புகிருேம்.

எந்தக் கருத்துக்கள் கண்ணதாசனுல் வலிந்து சொல்லப்பட்டதோ அந்தக் கருத்துக்களே தமிழர் பாதுகாப்புப் பேரவையால் வலிந்து, வற்புறுத்தப்படும்போது கண்ணதாசனின் ஓலம் காதைப் பிளப்பதென்ன கொடுமை!

கண்ணதாசனின் கரண கடிதத்தில்— மறுப்பு கடிதத்தில் ''நான் அரசியல்வாதி எம். ஜி. ஆரைத்தான் எதிர்த்தேனே தவிர மலையாளி எம். ஜி. ஆரை அல்ல. மலையாளி எம். ஜி. ஆர் பாரதநாட்டின் அதிகமாக வரிகட்டு மிடத்திலுள்ள ஒரு குடிமகன். அரசியல்வாதி எம். ஜி. ஆர். தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாத ஒரு தலைவர். இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நான் புரிந்து கொண்டிருக்கின்றேன்'' என்கின்ருர்.

தயவுசெய்து சிரிக்காதீர்கள். ஒருவரை அதிகமாக போற்றும் அதேசமயம் அவர்மேல் மண்ணைவாரி தூற்றக்கூடிய ஒருசின்னபிள்ளைத் தனம் கண்ணதாசனுக்கு கைவந்த கலையாகும்.

போதைத் தெளிந்த நேரத்தில் கீழே கண்ட செய்திகளை ஏறெடுத்துப் பார்க்குமாறு கண்ணதாசனைக் கேட்டுக்கொள்கிருேம்.

இன்று சில மாமன்களும், மாப்பிள்ளைகளும் கேரளாவில் இருந்து வந்திருக்கும் ஒரு ஆயுதமும் தங்களது கறுப்பு பணங்களையும் அவரிடம் கொடுத்து விளையாட சொல்லி இருக்கின்றனர்— அலைஓசை (12—3—74)

இன்று மனோகரனுக்கு வசதிகள் என்னென்ன? பல லட்சம் ரூபாயில் அண்ணுநகரில் அவர் கட்டியுள்ள வீடு எந்த சம்பாத்தியத்தில் வந்தது? அவரது மூதாதையர்கள் தேங்காய் உரித்து சம்பாதித்ததா? இல்லை, திருவனந்தபுரத்தில் வேறு ஏதாவது தொழில்கள் நடத்திஞர்களா?—

—அலைஓசை (14—3—74)

லட்சக்கணக்கில் தமிழர்கள் வாழும் வங்களத்தில் ஒரு தமிழ் எம். எல். ஏ கூட வருவதற்கு வாய்ப்பு இல்லை. பிற எந்த மாநிலமும் தமிழர்களைச் சட்டமன்ற உறுப்பினர்களாகக் கூட ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. எல்லா மாநிலங்களிலும் தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை உள்ளவர்கள்தாம் ஆட்சி நடத்துகிருர்கள். அதைத்தான் கருணுநிதி குறிப்பிட்டார். இங்கே மலையாளிகள் சகல உரிமைகளோடும் வாழ்வதை அவர் தடுக்க முயலவில்லை.

அலைஓசை (22—3—74)

இவ்வாறு எழுதிய அதே கண்ணதாசன் தான் குப்புற விழுந்து பேசுகின்ருர். மலையாளி எம். ஜி. ஆரை பேசவில்லை என்கிருர். அதற்கும் ஒரு வரம்பு வேண்டும்: அரசியலில் விலைமகளாக இருப்பதைக் காட்டிலும், ஆண்டியாக போய்விடுவதே சாலச் சிறந்தது. தமிழனின் உணர்ச்சியிலிருந்து விலகி—தடுமாறி நிற்கும் கண்ணதாசன் அதைவிட்டு அகன்று விடுவதே அதன் பெருமைக்கு அணிசேர்க்கும் செயலாகும். கண்ணதாசனும் அதைச் செய்வாரென்றே நாம் எதிர்பார்க்கின்ருேம்.

# நடிகையின் மகன்!

(ஞான. தங்கபாரதி)

நடிகை நளினிதேவி இரண்டாவது கணவனை விவாகரத்து செய்து மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை.

திருச்சானூர் கோவிலில் மூன்றாவது கணவனின் கரம்பற்றினாள். புதுக்கணவன் அகில இந்திய புகழ் திரைப்பட இயக்குனராம்.

இந்த 'திடீர்' திருமணம் நடந்து முடிந்ததும் நடிகை நளினியின் வீட்டில் அன்று இரவு தடபுடலாக விருந்து நடந்தது. பட உலக நண்பர்களும், பிரமுகர்களும் பிரபல நடிக—நடிகையரும் வந்து 'புது' மணத் தம்பதிகளுக்கு நல்வாழ்த்துக்கூறி பரிசுகள் வழங்கிச் சென்றனர்.

பத்திரிகைகள் 'நடிகையின் திருமணம்' என்று தலைப்பிட்டு படங்களுடன் பத்தி பத்தியாகச் செய்திகள் வெளியிட்டன.

ஒருவாரம் ஊட்டியில் 'தேன்நிலவில்' திளைத்துவிட்டு புதிய கணவருடன் நடிகை நளினி ஊர் திரும்பினாள்.

அன்று பிரயாணக் களைப்பினால் கட்டிலில் துவண்டு போய்க் கிடந்தாள் நளினி தேவி. அப்போது அவளுடைய ஐந்து வயது மகன் அருணா அழுதுகொண்டே வந்தான்.

நடிகையானாலும் பெற்ற பாசம் இல்லாமல் போகுமா? "ஏண்டா கண்ணு அழறே... உனக்கு என்ன குறை சொல்லடா" என்று செல்லமாகத்தட்டி சினிமா பாணியில் கொஞ்சினாள்.

'அம்மா...அம்மா புதுசா வந்த அப்பா என்னை மொறச்சு மொறச்சு பாக்கிறாரு... வெளியிலே அழச்சுப் போய் விளையாட்டுக் காண்பின்னு 'கிண்டலா பண்றேன்னு அடிக்கவர்றாரு அம்மா! பழைய அப்பா போலே இவரு...! என்று பையன் சிணுங்கி விட்டு; ஆமா இந்தப்பா எப்பம்மா போவாரு?' என்று துடுக்கோடு கேட்டு விட்டான்.

நளினியின் இதயத்தில் 'ஷாக்' அடித்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள். நடிகையல்லவா?

"கவலைப்படாதேடா கண்ணு! இன்னும் இரண்டு மாதம் போகட்டும்!' என்றாள் நளினி.

சிறுவனின் மகிழ்ச்சிக்கு சொல்லவும் வேண்டுமா? துள்ளிக்குதித்து தோட்டத்திற்கு ஓடினான். விளையாடத்தான்!

கட்டிலில் இருந்து எழுந்த நளினி கலைந்த கூந்தலை ஒதுக்கிவிட்டு முகம் கழுவி புடவை மாற்ற 'மேக்கப்' ரூமிற்குள் புகுந்தாள்!

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்
பட்டுகள் பிரமாதம்
நெசவே நெஞ்சையள்ளும்
குர்தாக்கள்
பெல் பாட்டம்கள்
லுங்கிகள்
சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் :: சென்னை-8

விற்பனைக்குத் தயார்!

# "அரசியல் உலகில் அண்ணா"

(தொகுப்பு: சி. என். ஏ. பாபு)

சட்டமன்ற, இலக்கிய அரசியல் ஆகிய சொற்பொழிவுகளைத் தாங்கி சிறந்த நூலாக வெளிவந்திருக்கிறது.

காலத்தால் போற்றப்படும் கருத்துக் கருவூலம் எந்த மொழியினரும், எந்த நாட்டவரும் விரும்பும் கருத்துப் பெட்டகம். நிறைந்த பக்கங்களைத் தாங்கி குறைந்த விலையோடு வெளிவந்துள்ளன!

விலை ரூ. 4/– நான்கேதான்)

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு.

விபரங்களுக்கு :

நிர்வாகி,

"பாபு பதிப்பகம்"

168, ஜோன்சு சாலை,

சைதை, சென்னை–15.

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

பாரதிதாசன். பெண்களுக்குப் பேச்சுரிமை வேண்டும்; பெண்ணடிமை தீரவேண்டும் என்ற எண்ணங்கொண்டவர் அவர். சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்,

"பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்
என் கின்றீரோ?
மண்ணுக்குக் கேடாய் மதித்திரோ
பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல்
முயற்கொம்பே.
ஊமையென்று பெண்ணை உரைக்குமட்டும்
உள்ளடங்கும்
ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு"

எனப் பெண்களுக்காக வாதாடும் வழக்குரைஞராகக் காட்சியளிக்கிறார்.

பெண் குழந்தை தாலாட்டில்,

"நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும்
இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழர்க்கு
வாய்த்தவளே"

எனத் தாய்க்குலத்தின் பெருமையினைத் தரணியறிய வேண்டுகிறார். இல்லறவாழ்வில் கணவனை மரமாகவும், மனைவியை வேராகவும் மதிக்கிறார். குறிஞ்சித்திட்டுக் காவியத்தில்,

"...............மரம் கணவன் வேர் மனைவி;
வேரை மரம் வெறுத்தால் வீழ்ந்திடுமன்றோ
குடும்பம்?"

என்று பெண்மையைப் போற்றிப் பாடுகிறார். ஆம்! வேர் இல்லையேல் மரம் இல்லை; மனைவி இல்லையேல் கணவன் இல்லை! குடும்ப வாழ்வின் இடும்பையினைத் தீர்ப்பவளாக மனைவியை மதிக்கிறார். மேலும், இருளை அகற்றி ஒளியை நல்கும் 'குடும்ப விளக்காக' வும் கருதுகிறார்.

[வளரும்]



# அண்ணா பிள்ளைத் தமிழ்

கவிஞர் தமிழ்ச்சுரபி

## 6. வருகைப் பருவம்

### 1

அண்ணலார் காந்திவந்து தம்மில்லம் தங்கு
அளவுக்குப் பெருமை பெற்ற [கின்ற
அடலேறு பெரியாரும் சுதந்திர நன்னாளை
அடர்த்துக்க நாளாய் எல்லாத்

தொண்டரும் கொண்டாட கட்டளை யிட்டு
துளியேனும் விரும்பி டாமல் [விட
துள்ளியெழும் அரியையும் விஞ்சுவலி
தோள்சுமந்து, மனது தித்த [தன்னிரு

எண்ணத்தைத் "திராவிட நா"டிதழில்
வெளியிட்டு
"ஏற்றமிகு பொன்னாள்; நன்னாள்
ஏந்திய கொடியுடனும் ஏற்றிய
குண்டுடனும்
இறந்தோர்நம் வணக்கம் பெற்றோர்

நண்பரீர்! என்றம்பி! விழாவெடுத்து நன்னா
நடத்து"வென் றவன்வருகவே! [ளாய்
நாடோறுஞ் சிற்றன்னை மடிதோறும் வளர்ந்
நடராசன் மகன்வருகவே! [தாடும்

### 2

பருத்த கொம்புத் தேன்மாரி
பாகுப் பந்தர் பொழிவதுபோல்
பகுத்த தலைப்பு வழுவாமல்
பகைவர் கவர்ந்து சொற்பொழிந்து

பெருமை மிகுந்த பெரியாரின்
பிறந்த நாளைக் கொண்டாடி
பெற்ற மனது கல்லென்றும்
பிள்ளை மனது பித்தென்றும்

நிருபித் துயர்ந்து, கவிவரிகள்
நித்தம் நித்தம் நித்திலமாய்
நீங்கா தளிக்க கவிமுடியில்
நிறுவி கவிஞர் நாபோற்றும்

அருமை பொருள்சேர்" அடுக்குமொழி
அண்ணா" வருக வருகவே!
ஆணின் வடிவ மெடுத்த தமிழ்
அணங்கே! வருக வருகவே!

### 3

கலிங்கங் கட்டி நின்றுசொக்
கலிங்கந் தொழுது படைநடத்தி
கலிங்கம் வென்று காஞ்சிகொடி
காட்டி ஆண்ட பல்லவனும்

பலிக்கா துரையைக் குறளுக்குப்
பகர்ந்த போதுஞ் சிறப்படைந்து
பழனக் காஞ்சி நகர்பிறந்த
பரிமே லழக னென்போனும்

புலிகள் பிறந்த காஞ்சிக்கே
புகழைத் தேடித் தந்ததுபோல்
புனைசேர் வீரக் காஞ்சிக்கும்
புகழைத் தேடித் தந்தென்றும்

அலையுங் கடல்முத் தெடுத்தீந்த
அண்ணா! வருக! வருகவே!
ஆணின் வடிவ மெடுத்ததமிழ்
அணங்கே! வருக! வருகவே!

### 4

இமய மலைக்கும் குமரி முனைக்கும்
உறவை இணைத்தோன் வருகவே!
இயலு மிசையும் நடமும் வளர
இரவும் கழித்தோன் வருகவே!

இமைக்கு நிகராய் தமிழர் புரந்த
இறைவன் வருக வருகவே!
இருளை யகற்ற எரியும் விளக்கை
எடுத்தோன் வருக வருகவே!

உமியை யரிசி தன்னைப் பிரிக்க
உழைத்தோன் வருக வருகவே!
உளுத்த பழக்கம் புதைத்து மறைத்த
உரவோன் வருக வருகவே!

தமிழு முலகில் பரவப் பயணம்
தரித்தோன் வருக வருகவே!
தம்பி தனக்கும் பெரியோர் தனக்கும்
உரிய தமையன் வருகவே!

# குடும்ப விளக்கு என்றும் எரிய குடும்ப நலத் திட்டம் உதவும்!

"சாவதற்கோ பிள்ளை தவிப்பதற்கோ பிள்ளை
காதலுக்கு வழி வகுத்து கருப்பாதைச் சாத்தக்
காதவொன்று கண்டறிவோம்!"

— பாரதிதாசன்.

*அளவின்றிக் குழந்தைகளைப் பெற்றவர்கள்
அளவில்லாத் துன்பம் அடைவதைக் கண்ட
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்
குடும்ப நலத்திட்டத்தை வலியுறுத்த
"குடும்ப விளக்கு" என்னும் நூலில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.*

*எனவே,*

*உங்கள் "குடும்ப விளக்கு" என்றும் அணையாதிருக்க
ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்ட பிறகு
அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம்:*

*கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளலாம்!*

*அல்லது வழக்கில் இருந்துவரும் கருத்தடைச்
சாதனங்களைப் பயன்படுத்தலாம்!*

இது பற்றி மேலும் மேலும் விவரம் அறிய உங்கள் அருகாமையில் உள்ள

## குடும்ப நலத்திட்ட நிலையத்தை அணுகுங்கள்.

-குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3.
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் (போன்: 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.